அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ஞூ ஜூலை மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—6.

விஷயங்கள்.

மடங்களும் மடாதிபதிகளும் :—பத்திராதிபர்.
சிகண்டி :—அ. குமாரசுவாமிப் புலவர்.
நல்லொழுக்கம் :—இலக்குமணப் போத்திகள்.
எரிமலை :—A. K. கிருஷ்ணையங்கார்.
[illegible] :—(5-வது இலக்கத் தொடர்ச்சி) கவிராஜ. வி. அ. நமசிவாயம் பிள்ளை B. A.
செல்வியாள் :—A. K. கிருஷ்ணையங்கார்.
பத்திரிகைக் குறிப்புகள் :—
சமாசாரக் குறிப்புகள்.

பத்திராதிபர்.
☞ வள்ளல். சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளியிடப்படுகின்றது.

1901.

[வருஷ சந்தா ரூ. 2.] [சஞ்சிகை அணா 4.]

அறிவித்தல்.

இது வரை பணம் அனுப்பித்தராத உள்ளூர் வெளியூர் கையொப்பநேயர்காள், உலகிற் பொருளின்றி எக்கருமம் கைகூடும். இது பற்றியன்றோ நம் பெரியவர் "மூவிவரும் மன்னரு முன்னுவ பொருளான் முடியும்" எனக் கூறினர் ஆதலின் 7-வது இலக்கம் வெளியாவதிற்குள்ளாவது தயை செய்து தங்கள் தங்கள் சந்தாப் பணத்தை அனுப்பித் தருமாறு வேண்டுகிறோம். அல்லது 7-வது இலக்கப் பத்திரிகையை V. P. வழி உறுதியாய் அனுப்பப்படும். அதனையாவது பெற்று ஆதரவு புரிவீர்களென்று நம்புகிறோம்.

☞ திருநெல்வேலியைச் சார்ந்த விடங்களிலுள்ள கையொப்பநேயர்கள் அடியிற் கண்ட விலாஸமுடைய நமது Agent இடத்தில் பணம் செலுத்தலாம்.—ப-ர்.

விலாசம்.

அரிஹர புத்திரக் குருக்களையா அவர்கள்,
கிளார்க்கு, சிவமதம் சமிற்றி ஆபீஸ்,
திருநெல்வேலி.

விளம்பர விகிதங்கள்.

பக்கம் 1-க்கு மாதம் 1-க்கு ரூ. 6.
பக்கம் ½-க்கு மாதம் 1-க்கு ரூ. 4.
பக்கம் 1-க்கு வருடம் 1-க்கு ரூ. 48.

ஸ்திரமாக வேண்டியவர்களுக்கு இதினினும் குறைவு செய்து தரப்படும்.

திருவாங்கூர்

மாட்சிமை தங்கிய மஹா ராணியார்

தேக வியோகம்.

இவர் சென்ற ஜூன் மீ 15-உ சனிக்கிழமை இரவு $7\frac{1}{2}$ மணிக்குத் தேக வியோகமடைந்தனர். இப்பிரிவை நினைந்து மிக விசனிக்கின்றோம். தற்காலத்தில் தொடர்ச்சியாய் இந்நாட்டரச பரம்பரைக்கு வந்த இத்தகைய நஷ்டங்களை யெண்ணியெண்ணி மனப்புழுக்க முறுதார் இந்நாட்டின்கண் உளரோ? தரும நாடாகிய இந்நாட்டிற்கு இந்நிலை வரற்பாலதோவென அயல்நாட்டாரும் துடிதுடிக்கின்றனரே! இவ்வாறான விஷயங்களை அடுத்தடுத்து எழுதுவதில் நம்உளம் மிகநைவுறுகின்றது. கையும் இறகுங்கூட நடுநடுங்குகின்றமையின் நமக்குள்ள இவ்வநுதாபத்தை இம்மட்டோடே நிறுத்துகின்றோம்.

—பத்திராதிபர்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I.	1901 ஆம் ஜூலை மீ 10-உ. திருவனந்தபுரம்.	இலக்கம்—6.

மடங்களும் மடாதிபதிகளும்

"மடமென்ப சத்திரமறியாமை மன்னியமுனிவாசப் பெயர்" என்ப, எனவே மடமென்பது ஈண்டு முனிவருறை விடமெனப் பொருளாயிற்று. முனிவராவார்,

"சீரைதை இயவுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவைதை இயலூன் கெடுமார்பி
னென்பெழுந்தி யங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டியரிகலோடு
செற்றநீக்கிய மனத்தினரி யாவதுங்
கற்றோரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங்கடிந்த காட்சியரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவாத்
துனியில் காட்சியரெனத்"

திருமுருகாற்றுப்படை கூறிற்று. இதனால் மரவுரி அல்லது கற்றோய்த்த உடுக்கையும் நரைமுடியும் அழுக்கற விளங்கும் வடிவும் பட்டினியால் தசைகெடுகின்ற மார்பினெலும்புகள் கோவை தோன்றி உலவு முடம்பும் பலபகல் கழிந்த உண்டியும் * செற்றமற்றமனமும் கற்றோர் சிறிதுமறியப்படாத அறிவும் கற்றோர் யாவர்க்குந் தலை

* 'பகைமை கெடுக்காலம் நிகழ்வது செற்றம்.'

152

மையும் ஆசையோடே ‡ கடிய சினத்தையும் போக்கின அறிவும் தவத்தான் மெய்வருத்த முளதேனு மனத்தான் வருத்தஞ்சிறிது மறியப்படாத இயல்பும் ஒருவருடனும் வெறுப்பில்லாத நலல அறிவும் முற்றவுடையாரே முனிவராவார் என்க. இம்மாட்சிப்பட முனிவர்குழாங்கட் குறைவிடமாகவே மடங்கள் யாவும் முற்காலத்தில் விளங்கிற்று. முனிவரிலக்கணமிவ்வாருக இவராசிரிப்ரிலக்கணம் எவ்வாறிருத்தல் வேண்டுமென்பது சொல்லாது போதரும. அன்னேர் "ஓடுஞ்செம்பொனு மொக்கவே நோக்கும்" பெற்றியினராயிருந்ததை நன்கறிந்த பல அரசர்களும் ஜமீந்தார்களும் பிரபுக்களும் பல்வகை அறமுமிந்நிலவுலகின் கண் நெடுங்காலம் விளங்குமாறு பல் பொருட் குவைகளை யிவர்மாட்டு அடைக்கலமாக ச்சேமித்துவைத்தனர். அப்பெருந்தகை முனிவர்களும் அவ்வரசர் முதலியோர் கருதியவாறே அப்பொருளனைத்தையும் அதற்கெனக் காத்தும் அதன் வருவாயை அவ்வறவழி உய்த்தும் "வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்" ஆயினர். இங்ஙிலையின் வழாது மடங்கள் விளங்கிய காலத்து அவ்வம்மடங்களுக்கு வழிப்பட்டவர்களும் அவ்வவர்க்குரிய † மொழிகளும் அவ்வம் மதநூல்கள் விதிக்குமாறங்களும் ஒருங்குற விளக்க முற்றதை எவர்தாமறியார்? மேற்கூறியாங்கு சைவத்திருநெறிக்கும் தமிழ்மொழிக்கும் உறையுளாய் விளங்கிய மடங்கள் முத்தமிழ்ச்குரிய சோசோழ பாண்டியநாடுகளிற் பலவுள. அவற்றுள் சோழவளநாட்டின் கண்ணுள்ள 'திருவாவடுதுறை மடம்' என்பது கல்வி, பொருள், அருள் என மூவகைத்தானுமுன்ன தென்பது பிரசித்தம். முற்காலத்தில இம்மடத்தால் தமிழிற்கும் சைவத்திருநெறிக்கும் விளைந்த நன்மைகள் அளப்பில ஸ்ரீ. ா. ஸ்ரீ. ஸ்வாமிநாத தேசிகர் ஸ்ரீ சிவஞான முனிவர், ஸ்ரீ. கச்சியப்ப முனிவர் முதலானேர் செய்த நன்றியை எவர்தான் மறப்பர்? இதுநிற்க இவ்விதமேனைய சைவ வைஷ்ணவ, மத்துவ

‡ 'செப்பத்தின் பின்னுசெறிந்த பொழுது சிற்பனம்' எனப்பொருள்படக் காண்பர் நச்சினார்க்கினியர்.

† மொழியென்றும் பாஷையென்றுமொக்கும்

ஸ்மார்த்த மடங்களும் விளங்கிவந்தன. ஒவ்வொன்றனையும் அவகாசமுள்ள வேளைகளில் தனித்தனி விசாரிப்பாம்.

இத்தகைய மேம்பாடுடைய மடங்கள் தற்காலத்தில் பெரும்பான்மையும் எந்நிலையிலிருக்கின்றதென்பதைச் சிறிதாராய்வாம். முன்னர்கூறி யாங்கு அறநெறிவளர்த்தற்கென ஈட்டப்பட்ட பொருள்களைக்கொண்டு "சுற்றநீங்கி இல்லையுண்டு" "வற்றன்மாமரக் காட்டகத்தி லிருந்துடல் வருத்" துதல் சிற்றுணர்ச்சியோர் செய்கை எனவதைக்கழித்து, தவளச்சுன்னந்தனைந் தாக்கி விசித்திர கூட கோபுர மாடமாளிகைகள் சமைத்து அதிற்போக பூமிக்கரசனாகிய இந்திரனை யொப்ப இருந்து உண்டுடுத்துப் பூசிப்பூண்டு உலகவாழ்வில் மூழ்கிக்கிடக்கின்றனராசிரியர்கள். இம்மட்டோ? தாமிவ்வாறு கீழ்மைப்படுவதுமன்றித் தம்முடன் ஆயிரக்கணக் கானவர்களைச் சேர்த்துவைத்துக்கொண்டு அன்னோர்க்கும் அறுசுவையன்னம் அணி ஆடைவாகன முதலியன உதவி அவர்களையுஞ் சோம்பேறிகளாக்கி விடுகின்றனர். இக்காலத்து ஒருவர்: இத்தகைய முனிவர்கள் மணமும் தன் நாசியில் வீசக்கூடாதென மனத்திற்கொண்டு அவர்களையும் நீக்கிப் புறமாக்கித் தங்கருத்துக் குடன்பட்டுத் தொண்டுபுரியும் பான்மையுடைய சிலரை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்க்கு வேண்டியவற்றை வேண்டியாங்களித்துப் பாராட்டிவருகின்றார். இவர்யாவரென்பதை இதனைப்படிப்போர்தாமே உய்த்துணர்ந்துகொள்ளுதல் எளிதாதலின் அவரை யீண்டு பெயரால் சுட்டாதொழிந்தாம்.

இம்மகானே தமக்கென ஒரு புதிய மாளிகை சமைத்திருக்கின்றனர். அதில் தூக்கப்பட்டிருக்கும் பல படிகவிளக்குகள மின்னொளி கால்வனவாம். பற்பல வினோதப்பொருள்களும் விசித்திரபடங்கள் அணியாய் அம்மாளிகையில் சேமித்துவைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை நீத்துமன்மதன் என்றும் வெளியிற் செல்லான் என்பது திண்ணம். அங்குள்ள மேலான நாற்காலிகளுக்கும் சோப்பாக்களுக்கும் லஸ்டர் வால்சேட்டு ராஸ்தண்டு களுக்கும் அளவில்லை. அங்கு காணக்கூடிய பியானு முதலிய சங்கீதக கருவிகளுக்கிணையானவற்றை வேறெங்குங்காண்பதரிது. இவ்வாத்தியப் பெட்டிகளுக்கிட்டிருக்கும் பொற்சரிகை வேய்ந்த பொற்பட்டுறைகளின் விலையே நூறுமிருநூறும் ரூபாயிருக்குமாம். வாயிலையழகு பெறச்செய்வதற்கெனத் தூக்கப்பட்டிருக்கும் வெண்பட்டுத் திரைகளே மிக்க விலையேறினவாம். இக்காட்சிகள் முற்காலத்து முனிவர்கள் கட்புலத்தகப்

படுமெனில் அவர்கள் இம்மடத்திலிருக்கு மவரை என்னென்ன பெயர்களிட்டழைப்பரோ யாமறியோம். இவர்க்கு இக்காலம் ரூபா எட்டு லக்ஷம் கடனிருப்பதாக அறிகிறோம். பரிதாபம்! பரிதாபம்! இவ்வாசிரியருக்குள்ள கடனைத் தீர்ப்பதற்குச் சீஷர்கள் முயற்சியாதிருப்பது என்னே? ஏனையமடாதிபதிகளிற் பெரும்பான்மையரும் அற்புதப்பதிகங்களோது வித்துக் கேட்டுககளிப் புறுவ தொழிந்து நாடன நாடக சங்கீதங்களை யாதரித்துக்கண்டும் கேட்டும் மகிழ்கின்றனர். நிகண்டு இலக்கண முதலிய கருவி நூல்களும் மேலோதுதற்குரிய சாஸ்திரங்களும் படிக்கப்படுவதை அறவொழித்து வழககு (சிவில் கிரிமினல்) களால்வந்த நேஸ்கட்டுகள் அதாவது பிராது ஸ்டேட்மென்று முதலியன முழங்கப்பெறுதமடமில்லை. மடங்களில் முற்காலங்களில் சாஸ்திரப் பிரசங்கிகள் விளக்க முற்றனர். தற்காலத்திலோ வக்கீல்களது பிரசங்கமே நீக்கமின்றிக் கேட்கப்படுகின்றது. இவ்வம்புகளிலும் வழக்குகளிலும் மடங்களுக்குச் செலவாகும் தொகைக்கு அளவில்லை. இவ்விஷயத்தில் இவர்களுககு உலோபஞ் சிறிதுமில்லை. ஊக்கமுமிக்குளது. விரிபபதில் என்னபயன். உலகடீப விருத்தியே இவர்களிடம் குடிகோண்டிருக்கின்றது. கடனும் நிமிஷத்துக்கு நிமிஷம் ஓங்கி வளர்கின்றது. பூசையிலுந்தியானத்திலுங்கூட இவர்கள் கடன்கொடுப்பாருளரோ என்றே உசாவுகின்றனர். கடன்கொடுப்பவர்களும் தருமசொத்தை ஈடாக வாங்கிககொண்டு பணங்கொடுப்பது நீதியன்று என்பதை விசாரிககின்றிலர். தருமச்சொத்துக்களெவ்வொன்றும் ஒற்றிவிலை ஈடு முதலியவற்றி குள்ளாய் வருகின்றன. கேட்பார் ஒருவருமில்லையெனத்துணிந்தே இவர்கள் தம் மனம்போன போக்கி லெல்லாம் செல்லுகின்றனர். இஃதிங்ஙனமாக இவற்றை யறிந்தும் இவர்நெறிப்பட்ட சீடர்களும் பிரபுக்களும் ஜமீந்தார்களும் தூங்குகின்றனரே இதுவும் பரிதாபமே! இவர்களிப்படியே இன்னுஞ் சிறிதுகால முறங்கிக கிடப்பார்களாகில் மடங்களின் கதி என்னாகும்? ஆதலால மதிமான்களே சிறிதேனும் கண்விழித்துப் பாருங்கள். உங்களறத்தைஉயிர்ப்பியுங்கள். உங்கள்மொழியை ஆதரிகக வழிதெளியுங்கள். இம்மடாதிபதிகள் இப்படி தருமச்சொத்துக்களைத் துர்விநியோகஞ் செய்வதற்கும் பாழாக்குவதற்கும் அதிகாரம் எவரிடத்திலிருந்து பெற்றார்கள்? தம்மாசிரியர் தீநெறியிற் செல்வராயின் அவரை நிங்கியாது விலகி மற்றொரு ஆசிரியரை யடைதலே தகுதியென அறநூல்கள் கூறுகின்றனவே. சிறிதுகாலத்திற்கு முன் தருமையாதீனத்தில் சின்னப்பண்டாரச்சன்னிதியாயிருந்த குருமூர்த்திகளை எதற்காக நீக்கினார்கள் என்பதை அறியாதார் யாவர். இதனை நம்மவர் நன்கு சிந்திப்பாராக.

தமிழ் நூலாராய்ச்சி.

நிகண்டு.

தமிழ் நூல்களிலுள்ள பொருள்களைத் தவறுபடாது நன்கறிந்துகொள்ளுமாறு படிக்கப்படுவனவாய் விளக்குங் கருவிநூல்களும் பல. அவ நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலியன. அவை யெல்லாவற்றுள்ளும் முதலிலே கற்கப்படுவது நிகண்டுநூல். நிகண்டு நூலாவது இன்ன சொல்லுக்கு இன்னது பொருளென அறிவிப்பது. வடமொழியிலே அமரகோசம், அமதந்தம், யாதவர், விசுவம் முதலாக எத்தனையோ நிகண்டுகள் இருக்கின்றன. வடநூல்கற்பவரால் அவைகளுள்ளே பல மனனஞ் செய்யப்படுகின்றன. தென்மொழியிலும் திவாகரநிகண்டு, பிங்கலநிகண்டு, ஆசிரிய நிகண்டு, சூடாமணிநிகண்டு, உரிச்சொனிகண்டு முதலாகப் பல நிகண்டுகளிருக்கின்றன.

தென்மொழி நிகண்டுகளுள்ளே இப்போது பெரிதும் வழங்கப்படுவன பிங்கலநிகண்டு, திவாகரநிகண்டு சூடாமணிநிகண்டு முதலாயின. பிங்கலநிகண்டு செய்தவர் பிங்கலமுநிவர். ஆசிரிய நிகண்டு, சூடாமணி என்பவைகளுக்கு முதனூலாய் விளங்கியதும் இப் பிங்கலமே. அது, "பிங்கலநிகண்டு சீர் முறு காங்கெயனுரிச்சொன் முறைபெறுசயாகரம் பகருமகராதியிவை முற்றுமொன்றுத் திரட்டி" என்னும் ஆசிரிய நிகண்டுப்பாயிரத்தாலும் "வருமுறை திவாகரம் போல் வைத்துப் பிங்கலந்தை தன்னில்" என்னுஞ் சூடாமணி நிகண்டுப் பாயிரத்தாலும் பெறப்படும். இப் பிங்கலம் நன்னூற்கும் முன்னுள்ளது. அது "பிங்கல முதலா நல்லோருரிச்சொலின்" என்னும் நன்னூற் சூத்திரத்தாற் பெறப்படும்.

இப் பிங்கலமும் இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் கண் வருஞ் சொற்களுள்ளே மிகப் பல, வடசொற்களும், பல, தென் சொற்களுஞ் சில, திசைச்சொற்களுமாகக் காணப்படுகின்றன. பிரகடனகாரராலே அநேக தங்கள் மாறு பாடேற்று விளங்குகின்றன. முதலாவதிலே நெருப்பின் பெயரிலே ஓமஞ்செய்தவைத் தாங்குவோன் எனப் பொருள்படுகின்ற உதவகன் என்பது "உதகவன்" எனவும், இரண்டாவதிலே விட்டுணுவின் பெயரிலே பகைவனை யடக்குவோன் எனப்பொருள். படுகின்ற அரிந்தமன் என்பது அருந்தமன் எனவும், அட்டவசுக்களின் பெயரிலே அநிலன் என்பது அணிலன் எனவும், வியாழன்

பெயரிலே வேதமந்திரத்திற்குத் தலைவன் எனப் பொருள்படுகின்ற பிருகற்பதி என்பது பிரகற்பதி எனவும், மூன்றாவதிலே சித்திரகவி வகையிலே நான்காமடி யெழுத்து மறைந்திருப்பது எனப் பொருள் படுகின்ற கூடசதுர்த்தம் என்பது "கூடசதுக்கம்" எனவும், நான் காவதிலே யாற்றின் பெயரிலே நீராற்செல்வது எனப்பொருள் படுகின்ற ஆபகை என்பது "ஆபதகை" எனவும், அனைத்து முண்டாகு நிலத்தின் பெயரிலே பெரியோனை வரிப்பது எனப்பொருள் படுகின்ற உருவரை என்பது உறவரை எனவும், புற்றாஞ் சோற்றின் பெயரிலே குருப்பி என்பது குறுப்பி எனவும், இடைச்சேரியின் பெயரிலே ஆபீரவல்லி என்பது இரண்டாக "ஆபீரம், வல்லியம்" எனவும், ஐந்தாவதிலே கதுப்பின் பெயரிலே அநு என்பது அனு எனவும், ஆறாவதிலே வெண்ணெயின் பெயரிலே நேற்றைப்பசுவுடையது எனப்பொருள்படும் ஐயங்கவீநம் என்பது இரண்டாக "ஐயம், கவீனம்" எனவும், செங்கல்லின் பெயரிலே மலைத்தொடர்புடையது எனப்பொருள்படும் கைரிகம் என்பது காரிகம் எனவும், ஏழாவதிலே எல்லையின் பெயரிலே சீமம் என்பது சிம் எனவும், செறிவின் பெயரிலே விறப்பு என்பது பிறப்பு எனவும், மாறுபாடுற்றன. இப்படிப்பல.

இவைகளுள்ளே பெரும்பாலன வடசொற்கள். அரிந்தமன் என்பதைப் "போரரிந்தமன்றுரந்த புங்கவாளி" (இராமா. மூலபல. கக) என்புழியும், ஆபகை என்பதை "ஆபகை யெனப் பெருகியோடிய மூடைக்குருதியால்" (இரகு. திக்கு. உகஉ) என்புழியும், குரும்பி என்பதை "குரும்பியன் மீகத்தகழ்ந்தனு மெட்டுக்குழாமொருபால்" (தணிகை. களவு. ௪0௪) என்புழியும், விறப்பு என்பதைத் "வித்து நிலத்தின் வெறுத்த பயிர் விறப்பினிங்க" (தணிகை. நாட். கக) என்புழியுங் காண்க. மற்றையவைகளை வடமொழி நிகண்டுகளிலுங் குருபாலப்பிரபோதிகைக் கண்ணுங் காண்க.

தமிழிலே பாரதம், இராமாயணம், கந்தபுராணம், கூர்மபுராணம் முதலிய இலக்கியங்களி லெல்லாம் பிங்கலம் முதலிய நிகண்டுகளிலேயுள்ள சொற்கள் பெரும்பான்மையும் வருகின்றன. தமிழ் நிகண்டுகளிலே அகப்படாத வடமொழி நிகண்டுகளிலுள்ள சொற்களுஞ் சிறுபான்மை வருகின்றன. இவ்விருவகை நிகண்டுகளுந் தமிழிலக்கியங்களின் சொற்பொருளை யறிதற்கு முக்கிய சாதனமாய் விளங்குகின்றன. நிகண்டு நூலுரைகளின்

கினைப்புக்குறைவினுற் போலும் பல நூல்களிலே பலசொற்கள் மாறுபாடடைந்தன.

சீகாழிப் புராணப் பிரகடனத்தி லே பரிணமம் என்பது "பரிநாமம்" (திருவிழா. உசு) எனவும். தாரகன் என்பது "தாருகன்" (ஸ்ரீகாளி. சுக) எனவும். நிரயம் என்பது "நிரையம்" (வெங்குரு. உச) எனவும், நேக்கே றிதல் என்பது "நேக்கறிதல்" (சுக சாக. உக) எனவும், சீத்தல் என்பது "சீய்த்தல்" (புகலி. கஎ) எனவும், முடத்தாழை என்பது முடைத்தாழை (மேற். உக) எனவும், போச்சாப்பு என்பது "போய்ச்சாப்பு" (மேற். கூ0) எனவும், விரீதி என்பது "வா ருதீ" (வேணு. கரு) எனவும் மாறுபாடுற்றது.

மச்சபுராணப் பிரகடனத்திலே வர்ணம் என்பது வானம் (அறுக். கூக) எனவும், பிரகிலாதன் என்பது பிரகலாதன் (மேற்படி. ருஎ) எனவும், உற்பிச்சம் என்பது உற்பீசம் (மச் சா. கஅ) எனவும்) உச்சைச்சிரவா என்பது "உச்சிரச்சிரவா" (சர்வா தி. அ) எனவும், சடிதி என்பது "சடுதீ" (பொதுச்சிரா உஅ) எனவும், தந்தாந்திரேயன் (பிங்கல. கச0) என்பது "தந்தாதிரையன்" (அசுரசாப. உ0) எனவும் உத்தராடம் என்பது "உத்திராடம்" (நட்சத். கஉ) எனவும், அங்குசம் என்பது "அங்கிசம்" (ஆர்த்திரா. கரு) எனவும், மாதுளை என்பது "மாதளை" (சருவ. கூ) எனவும் மாறுபாடுற்றது.

வேதாரணிய புராணப்பிரகடனத்திலே அவபிருதம் என்பது "அவபிரதம்" (பக். உகரு.) எனவும், அருச்சனை என்பது "அரிச்சனை" (பக். சக) எனவும், இருணம் என்பது "இரணம்" (பக். எகூ) எனவும், கிருகம் என்பது "கிரகம்" (பக். எ0) எனவும், சமத்து என்பது "சமி" (பக். உகூச) எனவும், பார்த்திவன் என்பது "பார்த்திபன்" (பக். அஉ) எனவும், பிருதிவி என்பது "பிருதுவி" (பக். ருருரு) எனவும், மாறுபாடுற்றது.

நல்லகவிராசபாரதப் பிரசடனத்திலே எண்ணெய் என்பது "எண்ணை" (நரக. கூ) எனவும், முந்நீர் என்பது "முன்னீர்" (இருட்டிணை உக) எனவும், திருதராட்டிரன் என்

பது "திரிதராட்டிரன்" (புத்திர. சுடு) எனவும், விருச்சிகம் என்பது "விரிச்சிகம்" (கிருட்டிணு. க0எ) எனவும், அருச்சனை என்பது "அரிச்சனை" (ஆசார. கஙஎ) எனவும், தேக்கிணம் என்பது "தக்கிணம்" (கபிலை கஙு) எனவும் மாறுபாடுற்றது.

சித்தியாருரைகளின் பிரகடநத்திலே யதாவத் என்பது "அதர்வத்" எனவும், அநநுபாஷணம் என்பது "அந்நுபாஷணம்" எனவும், காட்சி என்பது "காக்ஷிப" எனவும், ஷடத்துவா என்பது "ஜடத்துவா" எனவும், பாகியம் "பாஃயம்" எனவும் மாறுபாடுற்றது.

இவை யெல்லாம் நிகண்டு நூல்களுக்கு மாறாக வழங்கப்பட்டுள்ளன. இங்ஙனம் வழங்கப்படுமாயின்; தமிழ்மொழிக்குத் திருத்தம் எப்படிச் சித்திக்கும்! இப்பிரயோகங்கள் அபிதாநகோசம் முதலியவைகளிற் காணப்பட்டுப் பொருள் அறியப்படத் தக்கனவா? கற்போர் பொருளுணருமாறெப்படி? ஆபகை என்பது "ஆபதை" எனவும், யதாவத் என்பது அதர்வத் எனவும் எழுதப்பட்டிருக்குமாயின்; இவைகளின் பொருளை அறிபவர் யாவர்! தோட்டியின் பெயராகிய அங்குசம் என்பதை "அங்கிசம்" என்று கொண்டால்; அது பங்கு எனப் பொருள்படுவதன்றித் தோட்டி எனப் பொருள் படுமா? கடன் என்பதை உணர்த்தும் இருணம் என்பதை "இரணம்" எனக் கொண்டால்; வேறு பொருளாவதன்றிக் கடன் என்னும் பொருளுஞ் சித்திக்குமா? இவைகளையாராய்தல் ஆவசியகமன்றோ! சிலர், இவ்வாறு பரீட்சித்தல் பொறாமையென்பர். அங்ஙனமாயின்; தமிழ்நூல்கற்றலாலே பிரயோசநம்யாது? அவைகளையும் அங்கீகரணஞ் செய்தலா? இறிஞ் மிறிஞ்கள் போலச் சொற்களின்று படிப்போரை அலைப்பது நல்லதோ?

இங்ஙனம்

சுன்னுகம் பிலவ ஹூ வைகாசிமீ கருஉ	அ. குமாரசுவாமிப் பிள்ளை,

பின்னர் கான்டெர்பரி ஆர்ச் பி
ஷப் ஆயினடாக்டர் ஆபட் என்பவர்
தம் நண்பராகிய, காலஞ்சென்ற நாம
ஸ் சாக் வில்லியின் குணத்தை விவ
ரிக்கையில், அவருடைய இராஜதந்திர
சக்தியையாவது கவித்திறமையையாவ
து ஒழுக்கநிறையாகக் கொள்ளாது, சா
தாரண மனிதவில்லமையில் அவர் செலு
த்திய சாதாரண கடமைகளின் இயல்
பைக்கொண்டே தீர்மானித்தெழுதினர்,
" மனைவி மாட்டு மிகுந்த அன்பும், ம
க்கள்பால் விசேட பக்ஷமும், நண்பரி
டம் அழுந்திய பற்றும், பகைஞர்பால்
அதிகமான அமைதியும், வார்த்தையின்
கண் சிறந்த ஒற்றுமையுமாகிய எத்த
னையோ அரிய குணங்கள் அவரிடம்
இருந்ததைப்போல வேதியாரிடம் சி
றந்திருந்தன ?" வென்று அவர் சொ
ன்னார். ஓர் மனிதனுடைய இயற்கைக்
குணத்தை அவன் கிரந்தகர்த்தா, அ
ல்லது பிரசங்கி அல்லது இராஜா த
ந்திரனாக வெளிப்பட நடந்துகாட்டிய
ஒழுக்கத்தினின்று அறிவதினும் உள்ள
படியே அவனுக்குற்ற உறவினருடன்
அவன் நடந்துகொண்டதினின்றும், தி
னமும் அவன் நடத்திய எளியனபோ
ன்ற வர்த்தமானங்களினின்றும் மிகவு
ம் தெளிவுடன் உணர்ந்து மதிக்கலாம்.

கடமை செலுத்தலானது பெரு
ம்பாலும் சாதாரண மனிதரின் காரிய
ச்செயலுக்கு உரித்தாவதோடு ஒழுக்க
த்தின் உயர்தரம் பெறறவருக்குத் தா
னே சக்தியாகவு நிகழ்கின்றது. அவர்
கள் பணம் அல்லது சொத்து அல்ல
து கல்வி, அல்லது அதிகாரமில்லாத
வரானாலு மன உறுதிப்பாடும்; யோக்
கியதை, உண்மை, கடமையாகிய ஞா
னவளமும்; பொருந்தியிருக்கலாம். யா
ரொருவன் தன் கடமையை உண்மையு
டன் செலுத்த முயற்சிக்கிறானோ அவ
ன் தான் உலகத்தில் பிறப்புற்ற நோக்
கத்தை நிறைவேற்றுவோனும், புருஷ
லட்சணத்திற்கு வேண்டிய ஒழுக்கத்
தைத் தனக்குண்டானே விருத்திசெய்
வோனு மாகின்றனன். தம் ஒழுக்கத்
தைத் தவிர வேறு யாதொரு உடை
மையு மற்றவர்களென்று கூறத்தக்க அ
நேகர் உலகத்தில் வாழ்கின்றனர், அ
வர்களும் மகுடஞ் சூட்டிய ஓர் அர
சனைப்போன்று தம் ஒழுக்க நிலை பிறை
யாது ஊன்றி நிற்கின்றனர்.

புத்தி விருத்திக்கும் தூய்மை அ
ல்லது மேற்பட்ட ஒழுக்கத்திற்கும் அ
வசியமான சம்பந்தமின்று. பைபில் பு
திய ஏற்பாட்டில் அடிக்கடி மனிதரின்
மனப் பண்பையும் அருட் சக்தியையு
ம் குறித்து முறைபாடுகள் செய்யப்ப
டுகின்றன. ஆனால் புத்தியைப்பற்றிய
பிரஸ்தாபம் மிகவும் அருமையாகின்ற
து. "ஓர் முஷ்டி அளவு நல்லொழு
க்கமானது, ஓர் மரக்காலளவு கல்வி
க்குச் சமம்" என்று ஜார்ஜ் ஹெர்பர்
ட் என்பவர் கூறுகின்றனர். இதனால்

கல்வியானது நிந்திக்கப் படுவதென்பதன்று; ஆனால் அது நற்குணத்துடன் கூடியிருத்தல் அவசியமென்பதே. உயர்ந்த தனவான்களுக்கு இழிந்த ஊழியம் செய்கையும், குறைந்த செல்வர்பால் மமதை காட்டலுமாகிய இழிவான துர்க்குணமானது சிலசமயம் மேதாவிகளிடத்து நிகழக் காண்கின்றன. ஒரு மனிதன் யந்திர நூல், காவ்யம், சாஸ்திரமாகிய இவற்றில் தேர்ச்சியுற்றிருக்கலாம்; ஆயினும் யோக்கியதை சற்குணம், உண்மை, கடமையின் உற்சாகம், ஆகிய குணங்களில், வெறுமையும் கல்லாமையுமுள்ள அனேக உழவர்களுக்குப் பிற்பட்ட தரமுடையவனாக விருக்கலாம்.

பேர்தஸ் என்பவர் தம் நண்பருக்கு எழுதியது வருமாறு; "நீர் கல்விமான்களுக்கு மரியாதை செய்வதைப்பற்றி யழுந்தப்பேசுகிறீர், நானும் ஒப்புகிறேன்; ஆனால் கருணையுற்ற மனசும், ஆழ்ந்த கருத்தும், உயர்ந்தோர்பால் மதிப்பும் உலக அநுபவமும், நுண்மை ஒழுக்கமும், செய்கையிற் சாமர்த்தியமும் ஊக்கமும், உண்மை விருப்பும், யோக்கியமும், இனிய குணமுமாகிய இவையனைத்தும் ஓர் மனிதனிடம் சூன்யமாகிக் கல்வி மட்டும் சிறப்புற்றிருக்கலாம் என்பதை மறந்துவிடாதீர்" என்க.

மதித்துக்கனப்படுத்தற்குரிய பொருளனைத்தினும் கல்வி சாமர்த்தியமும் தேர்ச்சியுமே, மிகச்சிறந்தன போன்று ஒருவர் வியாக்கியானம் செய்வதைக் கேட்ட சர் உவால்டர் ஸ்காட் என்பவர் சொன்னவாறு: "அவ்வியாக்கியானமே உண்மை விதியாகுங்கால் இவ்வுலகம் எவ்வளவு கீழ்மை எய்தும்; கடவுள் காப்பாராக! நான் போதுமான புத்தகங்கள் வாசித்து கவனித்திருக்கிறேன். சிறந்தவரும் கல்வித் திறமையுற்றவருமாய் என் காலத்திலிருந்த அனேகருடன் சம்பாஷித்துமிருக்கிறேன். ஆனால் கல்லாத ஏழை ஸ்திரீ புருஷர்கள் கஷ்ட துன்பங்களுட்பட்டுக் கடினமு மிருதுவுமான வைராக்கிய பராக்ரமத்தைப் பிரயோகிக்கும்போதும், தங்கள் நண்பர், பக்கத்தவர்களுக்கு நேர்ந்த பிராரப்த சம்பவங்களில் தங்கள் வெள்ளையான கருத்துகளை வெளியிடும்போதும் அவர்களது வாக்கினின்றும் நான் கேள்வியுற்ற சிறந்த கருத்துகள் பைபில் ஒன்றைத்தவிர வேறெங்கும் கண்டதில்லை. சித்த சுத்தியின் பயிற்சியுடன் ஒப்பிடில் ஏனையவனைத்தும் சந்திரப் பிரகாசத்தை நிகர்க்குமென மதித்து உணர்ந்துகொண்டாலன்றி, நமது யதார்த்த முயற்சியையும் தெய்வ அமைப்பையும் கண்டு கௌரவப்படுத்திக் கொள்ளோம்.

ஒழுக்கத்தின் உயர்ச்சிக்குத் தனமானது அவசிய சாதனமன்று. அதுமட்டோ, அதனைக்கெடுத்துக் கேவலப்படுத்தற்குப் பெரும்பாலும் இடையரூத காரணமாகவும் பவிக்கின்றது. தனமும் மனக்கேடும், வளமும் தீயொழுக்கமும் ஒன்றிற்கொன்று நெருங்கிய உறவுடையன. கோழை மனசும், குறைந்த மன அடக்கமும், ஒழுங்கற்ற இச்சையுமுடையவரிடத்துண்டாம் செல்வமானது, அவர்களைத் தீநெறியில் திருப்பி அவர்களுக்கும் மற்றவர்க்கும் அளவிறந்த தீங்குகளை விளைவிப்பதற்குக் காரணமாகி அவர்களுக்குக் கண்ணிபோற்பவிக்கின்றது.

ஆனால் வறுமையானது உயர்ந்த ஒழுக்கத்துடன் கூடி வாழ்கின்றது. ஓர் மனிதன் முயற்சியும், வரவுக்குத்தக்க செலவும், சத்தியமு மாத்திரமுடையவனாகில் உண்மையுற்ற உயர்ந்தகௌரவம் பெற்றிருக்கலாகும். பர்ன்ஸ் என்பவருக்கு அவருடைய தந்தை சொன்ன புத்தி போதனையாவது மிகவும் சிறந்தது. அதுவருமாறு · எனக்கு ஒரு காசுகூட இல்லாதே போயினும் மனுஷத்தன்மையுடன் நடக்கும்படி கற்பித்தான்; ஏனென்றால் உண்மையும் மனுஷத்தன்மையுள்ள சிக்ஷையில்லாதவன் எவனும் மதிப்புக்கு அபாத்திரனாகின்றனன்'' என்க.

அந்த கிரந்தகர்த்தா மிகவும் தூய்மையும் மேன்மையுமுள்ள மகான் எனக் கண்டுணர்ந்த புருஷன் வடதேசத்தின் ஓர் கூலி வேலைக்காரன். அவன் வாரத்தில் பத்து ஷில்லிங்குக்கு மிஞ்சாத வருவாயுடையோன். அதனைக்கொண்டு தன் குடும்பத்தை ரக்ஷித்து வந்தனன். அவன் சாதாரணமான ஓர் குக்கிராமக் கல்விச்சாலையில் மிகச்சாதாரணமான ஆரம்ப வித்யாப்யாசமட்டும் செய்திருந்தபோதிலும் ஞானமும் ஆலோசனையும் நிறையக் கொண்டிருந்தனன். அவனுடைய புத்தகசாலையில் பைபிள், பிலேவல், போஸ்டன் எனும் புத்தகங்கள்தானிருந்தன. அவற்றில் பைபிளைத்தவிர மற்ற நூல்களைப்பற்றி அனேகர் கேள்விப்பட்டதுமில்லை. இந்நல்ல புருஷனை ‘உவர்ட்ஸ்வர்த்’ கவிஞரின் பிரசித்தபெற்ற உவாண்டெரெர்’ எனும் கதாநாயகனாக எடுத்துக்கொள்ளலாம். இவன் தன் வாழ்நாளை வேலையிலும் ஆராதனையிலுமாகப் பண்புடன் கழித்துத் தன் பதவியையடைந்த பின்னர், அநுபவ ஞானம் சுயம்பான சற்குணம், நன் முயற்சிகளுக்குக் கைகொடுத்தலாகிய இயல்பில், அவனிலும் சிறந்த மேதாவிகளும் தனவந்தர்களும் பொறாமை கொள்ளத்தக்கபுகழைநிலைநிறுத்தினன்.

ஊசர் இறந்தபொழுது கையிருப்பில் பணமாவது எவ்வித நாணய

மாவது மீதமில்லையென்பது அவரது மரண சாசனத்தால் விளங்குகின்றது. அவர் ஒருகாலத்தில்த் தன் ஆகாரத்திற்காக உழவு, தோட்டவேலை, கடிகார வேலைகளைச் செய்வது காலக்ஷேபஞ் செய்ய நேர்ந்தது. இவ்வாறு தன் கைகளால் வேலைபுரியுங்காலத்துத் தன்தேசத்திற்கு நன்மார்க்கத்தை உருவப்படுத்திக்கொண்டிருந்தனர். அவர் மிகவும் சன்மார்க்க பலமுள்ளவர், ஜெர்மனியிலுள்ள சகல இளவரசர்களைக் காட்டிலும் அவரை ஜனங்கள் மிகவும் கனப்படுத்திப் பின் பற்றுவராயினர்.

நல்லொழுக்கமே செல்வமாகும். உடைமைகளில் மிகுந்த கௌரவம் பெற்றதும் அதுவேயாம். எல்லாருடைய நல்லெண்ணமும் மரியாதையும் பொருந்திய தனமும் அதுவேயாம். அதனை வஹித்து பிரவிர்த்தி செய்பவர் இவ்வுலகச் செல்வத்தின் வளத்தைப் பெறாராயினும். நல்வழியாலும் சண்யகதையாலும் பெற்ற மதிப்பு கீர்த்திகளால் வெகுமானம் பெறுவர். வாழ்நாளில் நல்ல குணம் பயனடைய வேண்டுமென்பதும்; முயற்சி. சற்குணம்; நல்ல சுபாவமாகிய இவை மேலான கௌரவமுடையனவென்பதும்; உள்ளவாறே நல்ல மனிதர் முதன்மை பெறவேண்டுமென்பதும் நியாயமேயாம்.

தன்னைச் சரியானபடி கிரானித்துத் தான் சரியென்று அறிந்துணர்ந்த விதிகளுக்கு ஸ்திரமாய்க் கீழ்ப்படித்து ஓர் மனிதன் கைக்கொண்ட நோக்கமானது, அவனுடைய ஆயுசில் வெகுநாள்க்கொண்டு செல்கின்றது. அது ஓர் மனிதனை நேர்வழிப்படுத்தி, அவனுக்கு பலத்தையும் திடத்தையும் கொடுத்து உற்சாகமான செய்கைக்கு முக்ய காரணமாகின்றது. சர் பென்ஜாமின், பட்யார்ட் என்பவர் ஓர் சமயம் சொன்னதாவது; "எந்த மனிதனும் தனவந்தனாகவாவது. பிரபுவாகவாவது. அதுமட்டோ, புத்திசாலியாகவாவது இருத்தல் கடமையன்று ஆனால் யோக்கியனாயிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனன்" என்பதாம்.

ஆனால் நோக்கமானது யோக்கியமாயிருப்பதுடன், ஆழ்ந்த நியாயத்தால் உதித்து, உண்மை முழுமனசு, நேர்மையாகிய குணங்களை விடாது தழுவியுமிருத்தல் வேண்டும். கோட்பாடற்ற மனிதன் சுக்கான் திசைக்கருவிகளின்றி, அடிக்கிற காற்றினுக்கெல்லாம் அங்குமிங்கும் அலைந்துதிரிகிற கப்பலுக்குச் சமானமாகின்றான். அவன் அரச நீதி அல்லது தர்ம நீதி, ஒழுங்கு அல்லது ஆழுகையற்றவனைப் போலாகின்றனன். நல்லொழுக்க விதிகள் ஜனசங்கத்திற்கும் உலகத்திற்கும் உரிமைபட்டனவேயாம். ஒருவாறு, அவை மனித ஜாதியாருக்குப் பொதுப்பகையான பாபத்திற்கும் ஒழுங்கீனத்திற்கும் எதிர்க்கட்சியாயிருக்கின்றனவென்று வியூம் என்பவர் கூறினர்.

இக்காரணத்தால் எரிமலைகளில் உண்டாகும் புடைபெயர்ச்சியை, இரண்டு விதமாகப் பகுத்து, ஊக்கமிருந்தவற்றை விசுவியஸ் ஊக்கம் உள்ளனவென்றும், ஊக்கங்குறைந்தவற்றை ஸ்டிராம்போலி ஊக்கமுள்ளவென்றும் கூறுகின்றனர். ஆயினும் ஒரே மலையினிடத்தில் இவ்விருவகைத் தொழிற்பாடும் தோன்றுவதுண்டு என்று இதனால் விளங்குகின்றது.

ஊக்கத்திலொன்றைவிட மற்றொன்று கூடினதாயிருப்பினும், தன்மையிலிரண்டும் ஒன்றே என்பதை இனிச் சிறிது விளக்கிக்காட்டுவேன். 1872-ம் வருஷத்தில் விசுவியசில் உண்டான எரி எறியைப் பலசாஸ்திரிகள் நன்றாய்ச் சோதித்திருக்கிறார்கள். 19-ம் நூற்றாண்டில் உண்டான பல எரி எறியிலும், இது இரண்டாமிடம்பெறும் இதற்கு மேலானது, அம்மலையில் 1822ம் வருஷத்திலுண்டான தொன்றே. நேப்பில்ஸ் நகரத்தின் பக்கத்திலிருக்கிறதனால், இம்மலையின் செய்கையை எப்பொழுதும் பலரும் மிகக்கவனத்துடன் பார்த்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது, அம்மலையில் உண்டாகும் சிற்றசைவுகளைக் கூடத் தெரிவிக்கும்படியான, இயந்திரங்களையுடைய, சோதனைச்சாலை (Observatory) யொன்று, கட்டப்பட்டிருக்கின்றது. உடனுடன், நிழற்படம் பிடிக்குங் கருவிகளால் (Instantaneous Photography) அம்மலையில் உண்டாகும் அரியகாட்சியை, அவ்வப்பொழுதே படம்பிடித்து வைத்திருக்கிறார்கள். எத்தனை காட் சென்றபின் பார்ப்போருக்கும், அன்று நடந்தவை நடந்தவாறே இன்றும் தெரியும். கவிவாணர்களும் சரித்திரநூல் எழுதுவோரும் வியப்பினாலும், போதுமான சான்றுகள் இன்மையாலும், கூட்டியுங் குறைத்துங் கூறுவதுபோல், இப்படங்கள் ஒன்றையும் கூட்டியுங்குறைத்துங் காட்டா. விசுவியஸ் மலை, கடல் மட்டத்துக்குமேல் 4000 அடி உயரமுடையது. அம்மலை எறியும் கற்பொடியும், நீராவியும், கிட்டத்தட்ட 20,000 அடி உயரத்திற்கு எழும்பிக் கீழ்விழுந்திருப்பதைக் காணலாம்.

இவ் இளக்கம், வெளிப்படுவதற்கு முன்னமே, அந்த மலையினடியிடத்திலுள்ள சக்தி, படிப்படியாய்க் கூடுதலடைந்துவந்தது. எப்ரில் மாசம் 24-உ அன்றுதான், நமக்குப் புலப்பட்டது. 26-உ வரையிலும் சக்திபெருகிப் பெருகி ஒரு அவசான நிலையை யடைந்து, அடுத்தநாள் முதல்ஏறி யக்ரமம் போலவே. மெல்ல மெல்ல இறங்கிற்று. இந்த மூன்றுநாளினிடையில் அம்மலையின், வாய்முழுது மடைந்துபோயிற்று; உடலிலெங்கும் பல வெடிப்புகள் விழுந்தன. தாரைதாரையாய் இந்த வெடிப்புகளின் வழியாய்க் கன்

மழைப்பிரவாகம் புறப்பட்டொழுகியதைக் கண்டார் அம்மலை வியர்த்துக் கொட்டிற்று என்று கூறுதொழிந்திருக்க மாட்டார்கள்.

இதிலுண்டான ஒரு வெடிப்பு, மலையினுச்சியிலிருந்து அடிவரையிலும் நீண்டு கிடந்தது. அதன் தழும்பை இப்பொழுது காணலாம். கந்தவாயிலிருந்தும், பக்கங்களிலுண்டான வெடிப்பு வாய்களிலிருந்தும், ஏராளமான ஆவித்திரள் பயங்கரமான அரவத்தோடு எழும்பிக்கொண்டிருந்து, ஐந்து மையிலுக்கு அப்பால் நேப்பில்ஸ் பட்டணத்தில் இருந்த ஜனங்கள் இந்தச் சத்தத்தைக் கேட்டஞ்சி வீடுவாசல்களை விட்டுவிட்டு, வெளிப்புறப்பட்டு, வெளியிலிருந்து இராப்பொழுது முழுதையும் போக்கினார்கள். இச்சத்தம் தூரத்திலிருந்தவர்க்குத் தொடர்ந்தசத்தமாய் இருந்ததெனினும், மலைபக்கத்திலிருந்தவர்க்கு இடைவிட்டு இடைவிட்டுண்டாயிற்றென்பது தெரிந்தது. ஒவ்வொரு சத்தத்தோடும் பெரிய ஆவிக்கூட்டம் உருண்டுருண்டு வெளிக்கிளம்பி, ஆகாயத்திற் கலந்தது. இவ்வாவித் திரளில், பற்பல அணுக்கள் கலப்புண்டு கிடந்தன. பல பொடிப்பொருள்கள் இவற்றோடு சேர்ந்து மேற்சென்று, சிறிதுநேரஞ்செல்லக் கீழேவிழுந்து, மலையெங்கும் வியாபித்துக்கொண்டன. இவற்றுள் சிலதுண்டுகள் சோதனைச்சாலையின் ஜன்னல் கதவுகளிலிட்டிருந்த கண்ணாடிகளை உடைத்தும், தெருவில் நின்றவர்களைக் காயப்படுத்தியும் விட்டனவாம்.

அம்மலையின் பக்கங்களில் உண்டான வெடிப்பு வாய்களின் வழியாய், உருகியபாறை, பிரவாகமாய் வழிந்தோடிற்றென, முன்னர் கூறியிருக்கிறேன். இவற்றுள் மூன்றொழுக்கு மிகப் பெரியனவாயிருந்தமையால் மலையிலிருந்து வெகுதூரம் பிரவாகித்தோடின. இவற்றால் வழியிலிருந்த பல வீடுகளும் அழிந்துபோனதுடன், மஸ்ஸாடிஸோமமா என்றும் ஸான்ஸிபாஸ்டியன் என்றும் அழைக்கப்பட்டுவந்த இரண்டு கிராமங்களும் நாசமடைந்தன கன்மழு ஒழுகுகையிலும், அவற்றிலிருந்து, நீராவி, திரள் திரளாய் புறப்பட்டுக்கொண்டிருந்தது. உறைய முயற்சித்த உருகுபாறை பிரவாகத்தில், நீராவியின் வெளிப்போக்கால் சிறிதும் பெரிதுமான பலகுமிழிகள் உண்டாய், அக்குழிவுகளுடன் அவை பாறையாய் உறைந்துகிடப்பதை இப்பொழுதுங் காணலாம். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு எரிமலைப் பிஞ்சுபோலிருக்கின்றது.

விசூவியசின் காட்சியும் ஸ்டிராம்போலின் காட்சியும் ஒன்றுபோலவேயிருக்கின்றன என்பது இதுகாறும் யான் கூறியவற்றால் ஒருவாறு விளங்கி

165

யிருக்கலாம். பூமியின் தரையிடத்தில் வெடிப்புகள் உண்டாவதும், இவ்வெடிப்புவாய்களின் வழியாய் மிக்க வேகத்துடன் நீராவித்திரள் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு கிளம்புவதும், பெரிதும் சிறிதுமான பாறைத்துண்டுகளைப் பேர்த்துக்கொண்டு மேலெறிவதும், உருகிய கட்டிப்பொருள்கள் திரவப்பிரவாகமாய்க் குமிழியிட்டுக் கொண்டு உள்ளிடத்திருந்து வெளிவருவதும் ஸ்திராம்போலியில் கண்டவாறே விசூவியலும் நிகழக்கண்டோம்.

ஆயினும் முதற்பார்வைக்கு ஸ்டராம்போலி வெடிப்பில் புலப்படாத சில நூதனக் காட்சிகள் விசூவியஸ் வெடிப்பில் புலப்பட்டதுண்டு. அவையாவன.

விசூவியசில் எரி எறி நிகழ்ந்தகாலத்திற்கு முன்னும், நிகழ்ந்தபொழுதும், மலையும் மலையைச் சார்ந்த நிலமும், பூகம்பங்களால் நடுநடுங்கி விறைத்தன. சோதனைச்சாலையிலிருக்கும் கருவிகள் பூமியின் விறையலைத் தெரிவித்தன. பூகோளத்திற் கட்டுண்டிருக்கும் பொருள்களின் அணுக்கள், ஒன்றோடொன்று மோதிக் கொள்வதனால் இந்நடுக்கம் உண்டாகின்றது. பூமியில் நாம் நடக்கும்பொழுதும் பூமிக்கதிர்ச்சி உண்டாகின்றதேனும், அஃது நாம் உணரும்படியாயிருக்கவில்லை. நமது புலன் போதுமான உணர்ச்சியின்றி யிருப்பதே இதற்குக்காரணம் கீழிடத்தில் கட்டுண்டுகிடக்கும் திரவப்பொருளின் தொகுதி தளைந்தப் பொங்கித் தரையைப் பிளந்துகொண்டு, வெளிப்படவேண்டுமானால் அஃது எவ்வளவு ஊக்கமுடையதாயிருக்கவேண்டும்? அவ்வூக்கத்தால் அணுக்களுக்குண்டாகும் சலனம் பெரிதாயிருக்கவேண்டுமென்றே? அணுக்களின் சலனம் பெருகிப் பெருகி மேலெழும்புகையிற்றான், நமது புலன் அறிகின்றது. ஸ்டிராம்போலியிலும் இச்சலனம் உண்டாகாதிருக்கவில்லை. ஆயினும் அஃது மிகவுஞ் சாந்தமுடையதாயிருப்பதால் நமக்குப் புலப்படவில்லை. இவ்விரண்டு மலை வெடிப்புக்குமுள்ள பேதம் இதுதான்.

ஸ்டிராம்போலியிற் காணாது, விசூவியசில் கண்ட விசேஷதோற்றங்களில் வேறொன்று, யாதெனில் மின்வெட்டும் இடிமுழக்கமுமாம். நீராவித்திரளும், பாறைப்பொடிகளும், செங்குத்தாய் நிற்கும் பெருந்தூண்போல், மேலுறச் செல்லுகின்றன. சிறிதுயரம் போகையில், நீராவி, குளிர்ச்சியுறுகின்றது. உடன்மேகமாய்ப் பக்கங்களிற் பரக்கும். அப்பொழுது நீர்த்திவலைகள் புலப்படும். காற்றில்லாமலிருந்தால், செங்குத்தான தூண்வடிவுடைய நீராவித்தண்டின் மேலிடத்தில், புடைபரந்த மேகசாலம், தோன்றும்பொழுது, ஒரு அரசமரத்தின் காட்சி உண்

166

டாகும். இந்த நீராவித்திரளைச் சுற்றி மின்னல்வெட்டுவது பார்ப்பதற்குக் களிப்பையும் பயத்தையும் ஒருங்குவிளைக்கும். இரவிற்பார்ப்போருக்கே இது நன்றாய்ப் புலப்படும். இவற்றின் நிகழ்ச்சியால் பெருமழை யுண்டாவதும் இயல்பே. விசூவியசில் 1872-ம் வருஷத்தில் யுண்டான எரி எறியில் பெருமழை யுமுண்டாயிற்றெனச், சொல்லப்படுகிறது. இம்மழை, மிகுந்த சேட்டை விளைக்குமென, இத்தாலியர்கள் பயப்படுவதுண்டு. நல்ல விளைநிலங்களை, இம்மழைநீர்ப் பிரவாகம் கெடுத்துவிடுமாம்.

இவ்வாறு இயற்கையின் இலக்கணமறிந்தோர் அக்கினிபர்வதம் வெடிப்பதற்கும், அதில் உண்டாகும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தக்க காரணங்கள் கூற வல்லவராயிருப்பினும், வானசாஸ்திரங்கற்றோர் இன்னகாலத்தில் இன்ன இடத்தில் இன்ன நிகழ்ச்சியுண்டாகும் என்று முன்னறக்கூறுவதுபோல் இன்ன சமயத்தில் இன்ன இடத்தில் அக்னிமலை வெடிக்குமென்றும், பூகம்பம் உண்டாகுமென்றும், முன்னெடுத்துரைக்கத் தற்காலம் திறனின்றியிருக்கிறார்கள். இதற்குக் காரணம், இவ்வழியுண்டாயிருக்கும் நூலறிவு இப்பொழுது அதன் இளம்பிராயத்திலிருப்பதே. இனிச் சிறிதுகாலம், காட்சி அனுமானம், முதலியவற்றால் இச்சாஸ்திர அறிவு பெருகி முதிர்ந்துவருமெயில், இவர்களும், வானசாஸ்திரிகள் போல் தீர்க்கதரிசனம் செய்ய வல்லவராவார்கள் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆயினும், இவ்வாறு வருவதுணர்ந்து கூறுவதற்கு, பலதுறையறிவுகள் வேண்டும். உலகத்தில் எத்தனையோ எரிமலைகள் உண்டு. சில எரிமலைகள் வெகுகாலம் புடைபெயர்ச்சியுடையனவாயிருந்து பின் சிறிதுகாலம் அடங்கிக்கிடந்து திரும்பவும் புடைபெயர்ச்சி யுறுகின்றன. முன், எரிமலையின் அடையாளமே யில்லாதிருந்த பலவிடங்களில், புதிதுபுதிதாய ஒன்றும் பலவும் எரிமலை பின்தோன்றியிருப்பதுண்டு. முன்னிருந்த எரிமலைகளிற் பல, இருந்தஇடமே தெரியாமல் மாய்ந்து போயிருப்பதுமுண்டு. எவ்வெக் காரணங்களால் இவை உண்டாகின்றனவென்றும், எவ்வெக்காரணங்களால் இவை அடங்குகின்றனவென்றும், அடங்கியவை பின்னரும் எவ்வெக்காரணங்களால் வெளிப்படுகின்றன வென்றும், அறிந்துகொள்வது எளிதன்று. உருவத்திலும், செயலிலும், ஊக்கத்திலும், வேறுபாடுடைய பல வகுப்புமலைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமான நடத்தையை உடையனவாயிருக்கும். காலவியல், தேசவியல் முதலியவற்றால், (பொதுத்தன்மை யொன்றாயிருப்பினும்) சிறப்புத்தன்மைகளில் வேற்றுமை காட்டும்.

இவ்விதங் கூறுசெய்யப் பட்டவொருபாகத்தை யதன் முண்டபாகத்திற் பார்ப்போமானால், பலமுங் கடினமுமுள்ள ஒரு வஸ்துவினாலொன்றோடொன்று சேர்க்கப்பட்ட 33 எலும்புகளாலுண்டாய ஓர் சங்கிலி புலப்படும். இவ்வெலும்புகள் ஏறக்குறையவொரு மோதிரத்தைப் போல வட்டவடிவினை யுடையது. அவைகளுக்கு "வெர்டிபிரல்பாடீஸ்" * என்று பெயர். வட்டவடிவினையுடைய எலும்புகள் ஒன்றன் மேலொன்று வைக்கபப்பட்டிருப்பதால் மத்தியிலுள்ள ஒடுக்கமான இடைவழிக்கு "ஸ்பைனல்கனால்" ‡ என்று பெயர் இந்த "ஸ்பைனல்கனால்" சரீரத்தின் பின்பாகத்திலுள்ள தென்பது மேற்கூறியவாறு கூறுசெய்யப்பட்டவொருபாகத்தைப் பார்த்தால் நன்குவிளங்கும். சரீரத்தின் முன்பாகத்திற்கும் பின்பாகத்திற்கும் போக்குவரவு வழிகள் கிடையாதென்பதும், கூறுசெய்யப்பட்ட பாகத்தைப் பார்த்தால் நன்குதெரியும். ஸ்பைனல்கனாலில், நரம்புகளில் முக்கியமானதும் வெண்ணிறமுமுள்ள நீண்டவஸ்து § ஒன்றுண்டு அதற்கு "ஸ்பைனல் கார்டு" என்று பெயர். சரீரமுந்தலையுஞ் சந்திக்குமிடத்தில் "ஸ்பைனல்பாடீஸி னுச்சியிலுள்ள எலும்பின் தொடர்ச்சியாய் மண்டைக்குட் பிரவேசித்து தலையை முண்டத்தைப்போல முன்பின் என இரண்டுபாகமாகப் பிரிக்கிற ஒரு எலும்பு ஒன்றுண்டு. ஆதலின் முண்டத்தைப் போலத் தலையும் முன் பின்என இரண்டுபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பது விளங்கும். ஆதலின் தலையின் உச்சிமுதல் இடுப்புவரையுமுள்ள பாகம் முன் பின் என இரண்டுபாகமாகப் பிரிக்கப் பட்டிருக்கிறதென்பதும் முன் பாகத்திற்கும் பின் பாகத்திற்கும் நேரான போக்குவரவுக்குச் சாதனமுள்ள இடைவழிகள் கிடையாதென்பதும் தெற்றென விளங்கும். ஆனால் தலைக்கும் முண்டத்திற்கும் இது சம்பந்தமாய் ஒரு வித்தியாசமுண்டு. அஃதென்னவெனின் தலையில் பின்பாகம் முன்பாகத்தைக் காட்டிலும் அதிக விசாலமாயிருக்கும். முண்டத்தில் முன்பாகம் பின்பாகத்தைக்காட்டிலும் அதிக விசாலமுள்ளதாயிருக்கும். தலையின் பின்பாகம் "ஸ்பைனல்கனா" லிடைவழியினுடைய தொடர்ச்சியாகவேயிருக்கிறது. தலையின் முன்பாகத்திற்கு முகமென்று பெயர். அதில், கண்,

* Vertebral bodies. ‡ spinal canal. § spinal cord.

மூக்கு, வாய் இருக்கின்றன. தலையின் பின்பாகத்தில் மூளையிருக்கிறது.

முண்டமானது மார்பு என்றும் வயிறு என்றும் இருபிரிவினையுடையது. இவ்விரண்டினையும், தசையினாலும் மெல்லிய தோலினாலும் உண்டாக்கப்பட்டதும், ஏறக்குறைய ஒரு கொட்டாங் கச்சியைப் போன்ற வடிவினையுடையதுமாய ஒரு ஊடு கூரை a பிரிக்கிறது. இக்கூரை வயிற்றுப்பக்கத்தில் குழிவாயும் மார்புப் பக்கத்தில் குவிந்துமிருக்கிறது. முண்டத்தின் மேல் அற்றத்தினின்று கீழ் அற்றம்வரை ஆகாரக்குழலா b னது இந்தஊடுகூரையின்மத்தியின் ஊடுருவிச் செல்லுகின்றது. ஊடுகூரையின் ஓரங்களின் குறுக்கே ஆகாரக்குழலைப் போன்று முடிச்சுகளுள்ள கயிறுபோன்ற இரண்டு நரம்புகள் c முண்டத்தின் முழுபாகத்திலும் ஓடுகின்றன வயிற்றின் கீழ்ப்பாகத்தில் "வெர்டிபிரல்பாடீஸின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மூத்திர உற்பத்திஸ்தானங்கள் d இருக்கின்றன. இவைகள் தவிர வயிற்றுப் பாகத்தில் பித்த உற்பத்திஸ்தானமும் e "ஸ்பினீன்," f "பான்கிரீயஸ்" g என்றவைகளுமுண்டு இவைகளைப் பற்றிப் பின்னால் எடுத்துரைக்கப்படும். மார்பில், ஆகாரக்குழாயின் மேல் பாகத்தைத் தவிர இருதயமுஞ் சுவாசப்பைகளு மிருக்கின்றன. இருதயம் மார்பின ஏறக்குறைய மத்திய பாகத்திலும் சுவாசப்பைகள் இருதயத்தின் வலமிடமாகிய இருபக்கங்களிலும் அதைப் பொதிந்தாற்போலிருக்கின்றன.

a Diaphragm. b Alimentary canal. c Sympathetice ganglia. d Kidneys. e Liver. f Spleen. g Pancreas.

தோல். நம்முடைய சரீரத்தின் உள் அங்கங்களை மூடியிருக்கப்பட்ட தோல் இரண்டு அடுக்கினையுடையது. வெளியடுக்கு பொடியாயுஞ் செதில்களாயுங் கழிகின்றது. இதிலேதாவது காயப்பட்டால் நமக்கு வலியுண்டாகாது, ரத்தமும் வராது. தோலின் உள் அடுக்கு நெருக்கமாயும் பனைநாறுபோலவும் மிருதுவாயும், ரத்தமயமாகவுமிருக்கும். இதிலேதாவது காயப்பட்டால் அதிக வலியுண்டாகிறதுமல்லாமல் ரக்தமும் அதிசீக்கிரத்தில் வரும். நவத்துவாரங்களிலுமுள்ள தோலின் வெளியடுக்கு அதிக சிவப்பாயும் அதிக மெல்லிதாயும் ரத்தம் சீக்கிரத்தில் வரக்கூடியதாயுமிருக்கும். எண்ணெயைப் போன்ற ஒரு வஸ்து அதிலெப்போதுமுண்டாகிறதினால் அது எப்போதும் ஈரமயமாகவேயிருக்கும். நவத்துவாரத் தோலின் உள்ளடுக்கு மற்றையத் தோலின் உள்ளடுக்குப் போலவே யிருக்கும்.

என் சோதரியாகிய செல்வியாளின் குணமும் ஒழுக்கமும் உலகில் யாவராலும் புகழத்தக்கனவாயன்றி யிராவென்பது திண்ணம். கடையரினுங் கடையனாகிய உன்னை வேட்டல் செய்ய அவள் என்றும் உடன்படாள். அவள் மகா உத்தமமான நோக்கங்களை யுடையவள். எங்கள் குலத்தின் மாசின்மையை உலகிற்கு விளக்கிக்காட்டவந்த தீபமாயிருக்கும் அவளை நீ யிங்ஙனம் பழித்துக்கூறவும் துணிவுற்றாய். என்ன துன்பம் வந்தாலும் இழி தொழிலியற்ற இறையும் கோடாமரபினையுடைய பெருந்தகைமை எங்கள் குலத்திற்கே யுரியதுகாண். இதனையறியாது என்குல தீபமாகிய செல்வியாளைப் பழிகூறினை. என்னையும் பழித்தாய். என்னுயிரிருக்குமாயின் நீ யியற்றிய இந்தக் கொடுமைகளுக்குத் தக்கபடி உன்னைச் சிக்ஷியாமல் விடேன். நல்லது! நீ உன்னை நன்றாய்க் காத்துக்கொள்". என்றான். இதைக் கேட்ட காலவன் வாய்விட்டுச் சிரித்து தன் கைவிரலிற் கிடந்த மோதிரத்தைத் திருப்பித் திருப்பிக் காட்டிக்கொண்டு "நீ இச்சான்றையும் நம்பவில்லையா? இஃது நீ செல்வியாள் கையிலிட்ட மோதிரமன்றோ? பெண்களை நம்பிநடப்போர் பேடிகளும் பித்தர்களுமே என்பதை நீ யின்னு மறிந்திலையோ? 'பெண்களின் வாக்கும் பித்தர் சாக்குஞ் சரி' என்ற பழமொழியை நீயறிந்திலை போலும். எட்டிச் சுரைக்காய் கறிக்காகுமா? நீ அன்னிய நாடுகளிற் சஞ்சரித்தும் அன்னியமொழிகளைக் கற்றும் வந்துளாதலின் நம்முன்னோர் மொழிகளில் நம்பிக்கை யில்லாதவனாயிருக்கிறாய். அயல் நாட்டார் பெண்கள் பெருமையுடையார், என்று நம்பிக்கெட்டவர்கள். நீயும் அத்தன்மையனே. "சோதரியை மணந்து கொள்ள நினைத்த நீயா எனக்கு நீதியுபதேசிக்க வருகிறாய்" என்றான்.

"ஆ! ஆ! இஃதென்ன கொடுமை! இத்தீகாதமொழியை இப்பாவியென் செவிசுடத் திருப்பித் திருப்பி எத்தனை முறைதான் கூறுவன். இவன் தன் சோதரிகளையும் மகளையும் என்ன பாடுபடுத்தி யிருக்கமாட்டான்! கஷ்டம்! கஷ்டம்! இவன் கூறு மொழிகளுக்கு நீவிரே சாக்ஷி" என்று அங்கு நின்ற ஆறுவரையும் நோக்கிக் கூறிவிட்டுச் செயலற்று நின்றனன். காலவன் பின்னுங் கூறுவன்.

"ஆணிலும் பெண்ணிலும் பணத்திலாசை யொழிந்தவர் உலகத்துளரோ? காசைக் காணும்பொழுது கற்பென்பது காற்றிற் பட்ட இலவம்பஞ்சுபோற் பறந்துபோம் என்பதை நீயறிந்திலைபோலும். உன்னுடைமை யென்று நீமதித்திருந்தவை யனைத்துமின்று தொட்டென்னுடைமையாயின" என்று கூறி நிறுத்தினன்.

பொழுது விடியுமுன் அவ்வறுவரும் உக்கிர சேனனை விலங்கிட்டுப் பூட்டி அரவமடங்கி யிருக்கையில் அந்நகரின் வழியாய் அவனை நடத்திக் கொண்டுபோய் ஓர் நிர்மானுஷ்யமான காட்டிற் குளுய்த்தார்கள். இளவரசனும் உலகத்தை முற்றிலும் வெறுத்தவன்போல் தலைகுனிந்து கொண்டே அவரினும்விரைந் தவருடன் சென்றான். அக்காட்டின் மத்தியில் ஓர் குன்றுளது. அதன் மீதேறி நின்றால் அந்நகர முழுதும் நன்கு தெரியும். அருணோதயமாகையில் அவர்களக்குன்றின் தாழிடமடைந்தனர். அதன் மீதேறி உச்சியிற் சேரலும் சூரியனுதித்தனன். அரசகுமாரனும் சிறிது திரும்பிப்பார்க்கையில் சூரியனும் அந்நகரத்து நிகழும் அநீதிகளை அவனுக்கு நன்கு புலப்படுத்திக் கொடுக்கவந்தவன்போல் தெளிந்து பிரகாசித்தனன். மறுபடியும் போர் திசையை நோக்கித் திரும்பி நிற்கையில் அவர்கள் முன் 'அங்கிருள் வெய்யோற்கொதுங்கிப் புக்கிருந்தாலன்ன' தோர் பொழிலையுங்கண்ணுற்றான்.

"ஒன்றை நினைக்கினது வொழிந்திட்டொன்றாதல்" ஈசன் செயலன்றே! உக்கிர சேனனுடன் சென்ற வீரர்கள் அறுவரில் ஒருவன் முன்னிரவில் உக்கிர சேனன் தேசயாத்திரை முடிந்து வந்து வாயிலில் நிற்கிறான் அவனுள்ளே வரற் கனுமதி கேட்கிறானென்று காவலனிடம் போய்த் தெரிவித்து அவன் அனுமதிபெற்றுள்ளே யழைத்துச் சென்றவன். அவன் ஓர் பெரிய பிரபுவின் மகன். மகாவீரன். இந்திரனையும் சந்திரனையும் குபேரனையும் ஒரு பொருட்டாய் நினைப்பவனல்லன். ஈசற்குமெதிர் நின்று போர்புரிதற் கஞ்சாத நெஞ்சுறுதி பெற்றவன். எவனுடைய தயவையும் வேண்டாதவன் போரென்று கேட்டால் இவனுக்குச் சோறும் வேண்டாம். இவன் வீரத்தையும் தீரத்தையுங்கேட்டு வியவாதார் எங்குமில்லை யென்றே சொல்லுவார்கள். இவன் உடலில் வீரமுத்திரைகள் பலவுள. எவ்வரசர்க்குள்ளேனும் பெரும் போருண்டானால் இவனது துணையையே முதன் முதலவர்கள்வேண்டுவார்களென்றால் இவனுடைய பராக்கிரமத்தை விரித்துரைத்தல் வேண்டுமோ? ஆயினும் சுத்த வீரர்களைக் கண்டாலிவனுக் கவர்களிடத்தில் சந்தோஷமுண்டாவது இயற்கை. தன்றலைவன் கட்டளைப்படி நடப்பதே போர்வீரர்க்கு முக்கியமான அறமென்பதை இவன் நன்குணர்ந்தவனே ஆயினும் இச்சருணத்தில் அங்ஙனஞ் செய்தல் நீதியன்று என்றவனுட்கொண்டனன். "எக்காரணத்தால் வந்தபோராயினுமாகுக; இருதிறத்தாரும் வஞ்சனையற்ற மனமுடையவர்களாயும் சமமான வலியுடையவர்களாயும் போதுமான படைதரித் வராயும் பொது

R011-92 171 1-344
1169-2467

விடத்தில் வெளிப்பட்டாய் எதிர்த்து நின்று போராடப் புகுவார்களாகில் அப்போரில் வெற்றிபெற முயற்சித்தலே வீரமாகும். அஃதன்றி அறுவர்க்கொருவனும் ஆயுதமற்றவனும் தளையாற் பிணிக்கப்பட்டவனுமிருக்குமொரு வீரனை வஞ்சித்துக் கொலைசெய்தல் வீரமாகுமோ? பேடிகளன்றோ இத்தகைய தொழிலைச்செய்வார்? இஃதியானெவ்வாற்றானு முடன் படல்தகாது” என்றுரைத்துப் பின்விட்டு நின்றுவிட்டனன். இவனுக்குக் கேசரிவீரன் என்று பெயர்.

உக்கிர சேனனை அழைத்துக்கொண்டுபோனவர் அக்குன்றின் உச்சியில் நின்றனர். உடனே வாளையுருவிக் கையிற் பிடித்துக்கொண்டு உக்கிர சேனனைக் கொல்ல எத்தனித்தனர். இராசகுமாரனுக் குயிர்மீது ஆசையுடனே உண்டாயிற்று. தனியனும் நிராயுதனுமிருந்தபொழுதிலும் ஓரற்றத்தில் துரத்துண்டு மேலோடிச் செல்லமார்க்கங் காணாத புலியைப்போல் வீரசேனன் தன்னைச் சூழ்ந்து நிற்பவர்களை ஒருதரம் கண்ணுருட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கையில் கேசரிவீரன் ஓர் பக்கமாய் நெருங்கி அவன் சமீபத்தில் வந்து நின்றான்.

உக்கிர சேனனன் திடீரென்று தன் விரலால் சுந்தரநகரியைச் சுட்டிக்காட்டி “அரண்மனைக் கோபுரத்தின் மீது காணு மவ்வொளியைப் பாருங்கள்! அவ்வொளியங்குண்டாவதற்குக் காரணமென்ன?” என்று கூறவும் ஐவரும் திரும்பியங்கு பார்த்தனர். அங்கொளி யொன்றுமில்லை யென்றறிக. அவர்கள் ஞாபகத்தை வேறுவழியிற் படுத்தற்கே இவன் இவ்வனம் கூறியது. உடனே வேங்கைபோல் உக்கிரசேனன் ஒருவன் மீது பாய்ந்து அவனைக் கீழே வீழ்த்தினன். வீழ்கையில் அவன் கையிலிருந்த வாளையுந் தன் கையிலாக்கிக் கொண்டான். பின்பு தன் பின் பக்கத்தில் நின்ற ஒரு மரத்தின் மீது தன் முதுகுறச்சாய்ந்து நின்றுகொண்டு ஊக்கத்துடன் கத்தியை வீசி யவர்நால்வரையுந் தன்னையணுகாவழி சிறிதுநேரம் விலக்கி நிறுத்தினன்.

சூரப்புலிகளே! எங்கே பார்ப்போமுங்கள் சூரத்தனத்தை. நீங்கள் நால்வருள்ளீர். நானொருவனேயுளன். ஆயினும் ஒரு அரசகுமாரனைக் கொல்வதவ்வளவு லேசானகாரியமன்று என்று நீங்கள் அறிந்துகொள்ளத் திறனற்றுப் போனீர்களன்றோ! எவன் என் வாளின் திறத்தை முதன்முதல் உணரத்தைரிய முடையவனென்று நான் பார்க்கட்டும்” என்றான்.

உடனே கேசரிவீரன் இவனது ஆண்மையையும் ஆற்றலையுங் கண்டு ம

கிழ்ந்து உடனே தானுமவனுக்குத் துணையாய்ப்போய் நின்று கொண்டு "ஆடுமோடறுப்பவர்களுடன் சேர்ந்து கொலை செய்ய யான் ஒருப்படேன். கடவுள் கொடுத்திருக்குமரிய உயிரைக்காத்துக்கொள்வதற்கு நியாயமான வழியில் முயலுமொரு யோக்கியன் சங்கடத்திலகப்பட்டு நிற்பதைக்கண்டு அவனுக்குத் துணை செய்யா தொழியேன். ஏ ராஜகுமார! என்னுடன் சேர்ந்து வா. இத்திருட்டுப் பையன்களை இப்பொழுதே துரத்திவிடுவோம்" என்று கூறினன்.

இத்தருணத்திலும் உக்கிர சேனன் இரக்கமுள்ளவனாகவே யிருந்தனன். நால்வருக் கிவர்களிருவர்களே யுதாரா யிருந்தார்களெனினும் உக்கிர சேனன் வலிமையொன்றுக்கே இவர்கள் ஈடு சொல்லார்கள் என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். அதனோடு தனக்குத் துணைபுரிய வந்திருப்பவன் மேலான பராக்கிரமசாலி யென்பதையுந் தெரிந்து கொண்டான். எதிரிகள் சிறிதுநேரம் கிட்டவர அஞ்சித்தூரத்திலேயே நிற்பதையு முணர்ந்தான். கேசரிவீரனிப்படி மோசப்படுத்தவன் என்ற எண்ணமவர் மனதிற் சிறிதுந் தோன்றிற்றில்லை. இதுவும் அவர்கள் அதைரியத்தை அதிகப்படுத்திற்று. இளவரசன் அவர்களில் முதல்வனாய் நின்றவன் மீது பாய்ந்து அவன் மூளையின்வழியாய்த் தன் கத்தியை இறக்கிக் கொன்றிட்டான். அவனும் பேரரவமிட்டுக் கொண்டிறந்தான். வேறொருவன் அதிகோபத்துடன் அவனைத் தாக்கினான். உக்கிர சேனன் சிறிது பின் வாங்கிச் சென்று பின் திடீரென்று இடதுகாலை முழந்தாளிட்டு மடக்கியிருந்து கொண்டு அவனை ஒரே குத்திற்குத்திச் சாய்த்துவிட்டான. கேசரி வீரனும் வேறொருவனை ஒரேயடியில் தலை முதற் கால்வரையிலும் நடுநடுங்கச் செய்யவே அவன் கையிலிருந்த கத்தியைக் கீழே எறிந்து விட்டு ஓட்டம் பிடிக்கத் தொடங்க கேசரிவீரனவனைப்பின் தொடர்ந்து செல்ல எத்தனிக்க நான்காவது மீந்தவனும் பெற்றேன் பிழைத்தேன் என்று பதைபதைக்க ஓடினான். இவர்களைப் பின் சென்று பிடித்துக் கொண்டு வரவேண்டுமென்று கேசரி வீரனுரைக்க உக்கிர சேனன் அவனைச் சமாதானப்படுத்தி நிறுத்தினான்.

"மற்றோடிப்போன இருவரும் ஊரிற் சென்றால் உடன் கூட இருபது பேர்களைத் திரட்டிக்கொண்டிங்கு வருவார்கள். இன்னும் பலரை நாம் கொல்ல வேண்டிவரும். தற்காத்துக்கொள்ள முயன்றபோதும் இப்பொழுதே நாம் பெரும்போர் செய்களைத்திருக்கிறோம். இன்னுஞ் சண்டைக்கேனிடங் கொடுக்க வேண்டும்.

புத்தகக் குறிப்புகள்.

கம்பராமாயணம் ஆரணிய காண்டம் மூலமும் உரையும்.

உடுமலைப் பேட்டை எம். ஆர். கந்தசாமிக் கவிராயரவர்களும் எஸ். வேங்கடராயலு நாயுடு காரும் சேர்ந்து இயற்றிய உரையுடன் பதிப்பித்த கம்ப ராமாயணம் ஆரணியகாண்டம் பிரதியொன்று நம் பார்வைக்கனுப்பப்பட்டது. கல்வியிற் பெரியோனாகிய கம்ப நாடர் அருளிச்செய்த இராமாயண மகா காவியத்திற்குத் தக்க உரையில்லாமலிருக்கு மிக்காலத்தில் அதன் ஓர் பாகத்தை உரையுடன் வெளியிட்ட இவர் தமிழ் உலகத்திற்குப் பேருதவி செய்தவராக மதிக்கற்பாலர். தெளிந்த நடையில் எழுதப்பட்டிருக்கு மிவ்வுரையில் பாக்களிலடங்கிய அரிய கருத்துக்களு மிலக்கண குறிப்புகளும் வெகுவா யெடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இக்காண்டத்தில் ஆங்காங்குவரும் பதங்களுக்கும் பதத் தொடர்களுக்கும் சங்கநூல்களினின்றும் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களினின்றும் பிரயோகங்களெடுத்துக் காட்டி விளக்கியிருக்கின்றனர். இவ்வுரை சர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்கு படிப்பவர்களுக்கு மாத்ரமேயன்றி நூலின் அரியகற்பனாலங்காரங்களுக்காக அதனை விரும்பிப் பயிலும் தமிழபிமானிகளுக்கும் உபயோகமானது. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருப்பதோடு உயர்ந்த "காலிகோ" கட்டடமு முடையது. விலை அணா 3-8-0.

இரகுவமிசக் கருப்பொருள்

யாழ்ப்பாணத்து மகா வித்வான் அரசகேசரி யென்பவரால் வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்த்துச் செய்யப்பட்ட "இராகுவமிசம்" காளிதாசக் கவிச்சக்கரவர்த்தி யியற்றிய நூலேபோல் விரிந்து சிறந்த கற்பனாலங்காரங்களை மிக்குடையதாயினும் உரையின்றி யெளிதிற் பொருளுணர்தற்கரிய பெருநூலாதலால் இக்கருப்பொருள் அதற்கு உரையாக சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசாமிப்புலவரவர்களாற் செய்யப்பட்டது. எளிதிற்பொருளுணர்தற் கிடனின்றிக் கிடந்த அனேகம் சொற்களும் சொற்றொடர்களும் பாக்களும் செறிந்து கிடக்கும் இந்நூலில் அத்தகையவாய் 48 பாக்களை யொருங்கு திரட்டி அவற்றிற் சிலகவிகளுக்குப் பதவுரையும், சில கவிகளுக்குப் பதவுரையோடு விசேடவுரையும், சில கவிகளுக்குப் பொழிப் புரையும், சில கவிகளின் கருத்தைமாத்திரம் விளக்கியு

ம் எழுதப்பட்டது. இவ்வுரை பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் உரைத்திறன் வாய்ந்து நுணுகிய பொருள்களை யெடுத்து விளக்கும். மேலும் உரை யெழுதப்படாத ஏனையபாக்களிலும் ஆங்காங்கு வரும் அரும் பதங்களையும் அருந்தொடர் மொழிகளையும் தொகுத்து அவற்றின் பொருளை விளக்கும் "அருஞ்சொற்பொருள் கோளும்" "அருந்தொடர்ப் பொருள்கோளும்" சேர்த்திருப்பதால் தமிழிரகுவமிச வுணர்ச்சிக்கு இவ்வுரை இன்றியமையாத கருவியென்றேசொல்வோம். இதன் விலை அணா 4.

இராமாயண சங்கிரக துதிகவி.

வடமொழியிலும் மஹாராஷ்டம் முதலிய பாஷைகளிலும் "மந்திர இராமாயணம்" என்னும் பெயரால் வழங்கப்படும் நூல்களுக்கு நேராகத் தமிழில் திருவாழி நகரக் காளி காவலப் பெருமாள் பிள்ளையவர்களால் 139 விருத்தப்பாவரத் செய்யப்பட்டது.

இஃது எளிய நடையில் இராமாயணக்கதை முழுதும் சுருக்கிச் சொல்லி ஒவ்வொரு கவியினிறுதியிலும் "ஸ்ரீராமன் பாதமலர் சென்னி சேர்ப்பாம்" என்பது போன்ற தோத்திரரூபமாய் முடிகின்றது. இராமாயணத்தை நியமமாகப் பாராயணஞ் செய்யுமடியார்கட்கு மிகவும் உபகாரமாயிருக்குமென்றெண்ணுகிறோம் இதன் விலை அணா 2.

வேண்டியவர்கள் அக்ஷர்க்குச் சைவப்பிரகாச அச்சியந்திர சாலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

திருப்பரங்கிரிப்புராண வசனம்.

இஃது சைவாசாரியராய் விளங்கிச் சேதுபுராணம் பாடிய ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராலியற்றப்பட்ட செயுளுக்கிணங்கச் சேற்றூர்ச் சமஸ்தான வித்வான் மு. ரா. அருணாசலக் கவிராயரவர்களாற் செய்யப்பட்டது. இந்நூல் இனிய செந்தமிழ் நடையையும் முன்னூலிலுள்ள கதையை உள்ளவாறே யெடுத்துச் சொல்லுமியல் பினையுமுடையது. வசன ரூபமான நூல்கள் சுருங்கிய நம் தமிழ்ப்பாஷையில் கவிராயரவர்கள் இப்புத்தகமெழுதியது உயர்தரக் கல்வியிலார்க்கும் புராணகதையை எளிதிலுணர வழியானது மன்றித் தமிழ்பயிலும் இளைஞருக்கும் பெண்களுக்கும் மிகவுபகாரமானது கவிராயரவர்கள் பரங்கிரிமுருகக் கடவுள் மேற்பாடி இதனுடன் சேர்த்து அச்சிற்பதிப்பித்திருக்கும் பிள்ளைத் தமிழும் சந்தவின்பமும் பொருணலமும் சிலேடைப் பொருத்தமும் பொலிந்து படிப்பவர்க்கு மிக்க ஆனந்தம் விளைக்கின்றது. இப்புத்தகத்தின் காகிதமும், அச்சும், கட்டடமும் படிப்பவர் பார்ப்பவர் மனதைக்கவர்கின்றது. இதன் விலை அணா 8.

சமாசாரக் குறிப்புகள்.

தந்தியில்லாத மின் தபால்:— இந்த மின்தபால் சமுத்திரங்களுக்கிடையிடையே ௨௱ மைலிலகளில் வைக்கவும் சமுத்திரங்களில் போக்குவரத்துச் செய்யும் கப்பல்களைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் ஆங்கில துரைத்தனத்தார் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

✿✿✿

ஒரு புதிய ஆகாயக் கூண்டு:— அமெரிக்காவிலிருக்கும் சிக்காகோவிலுள்ள மிஸ்டர் சென்ரிகாமான் என்பவர் தந்தியில்லாமலோட்டக்கூடிய புதிய ஆகாயக் கூண்டு செய்யும்விதம் கண்டுபிடித்திருக்கிறாராம், இக்கூண்டை மின்சாரக்கம்பனத்தில் (Electrical Vibrations or Hertesan waves) நடத்தக்கூடுமாம். இக்கூண்டு வெடிக்கும் பாணங்களைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தின் மேலேறி எதிரியின் பாளையமோ கோட்டையோ, அரணிப்போ, நடத்துவோன் விரும்புமிடத்தில் அப் பாணங்களைவிட்டு சர்வநாசஞ்செய்யுமாம். நடத்துவோன் அநேகமைல தூரத்துக்கப்பாலிருப்பான்.

உலகத்திலே இருக்கும் தீக்குச்சிக் காருகசாலைகளிலெல்லாம் மிகப்பெரியது சுவீடன் நாட்டிலே திசவஹாமிடத்திலிருப்பது எனக் கூறப்படுகிறது. அதில் ௲ ஆண்கள் வேலையால் ௯ லட்சம் பெட்டிகள் நாளொன்றிற்குச் செய்யப்படுகின்றன. இதில் ஒருவருஷம் செய்யப்படும் தீக்குச்சிப்பெட்டிகள் மட்டும் இந்தியாவின் ஜனத்தொகைக்குச் சரியாகும்.

✿✿✿

சென்னை சர்வ கலாசாலை:— (1) ம. ள-ள-ஸ்ரீ T. இராமகிருஷ்ணபிள்ளையவர்கள் B. A. F. M. U. F. R. H. S. (அக்கிராசனாதிபதி.) (2) ம. ள-ள ஸ்ரீ J. M. வேலுப்பிள்ளையவர்கள், F. M. U. (3) ம. ள-ள-ஸ்ரீ J. லாஜாஸ், F. M. U. (4) ம. ள-ள-ஸ்ரீ T. பாலசுந்தர முதலியாரவர்கள். (5) ம. ள-ள-ஸ்ரீ V. கனகசபைப்பிள்ளையவர்கள். B. A. R. L. (6) ம. ள-ள-ஸ்ரீ T. செல்வக்கேசவராய முதலியாரவர்கள் M. A. இவர்கள் 1901 வருடத்துக்கு பிரதம பரீக்ஷாதிகாரிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர்.

சந்தா வரவு.

நம்பர்.			ரூ	அ
121	ம. ள. ள. ஸ்ரீ.	சூரிய மூர்த்தியா பிள்ளை அவர்கள் ...	2	0
173	,,	இரா. ம. பண்டாரசிவ ஓதுவா மூர்த்திகள்	2	0
174	,,	அ. மு. ம. மணிய பிள்ளை அவர்கள் ...	2	0
176	,,	இராமனுஜ பிள்ளை அவர்கள்	2	0
116	,,	கவிராஜ. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்	2	0
101	,,	வி. வ. ஷண்முகம் பிள்ளை அவர்கள் ...	2	0
271	,,	R. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் ...	2	0
273	,,	பி. மாதேவன் பிள்ளை அவர்கள் ...	2	0
341	,,	கவிராஜ. ஈசுவர மூர்த்தியா பிள்ளை அவர்கள்	2	0
356	,,	C. சடகோப பிள்ளை அவர்கள் ...	2	0
364	,,	பொ. மு. முத்தைய பிள்ளை அவர்கள் ...	2	0
365	,,	சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ...	2	0
366	,,	கி. சு. வ. கிருஷ்ண பிள்ளை அவர்கள் ...	2	0
367	,,	அ. சோ. வே. வேலாயுதம் பிள்ளை அவர்கள்	2	0
368	,,	சி. த. சிவசூரிய நாராயண பிள்ளை அவர்கள்	2	0
374	,,	வ. அ. வி. திருச்சிற்றம்பலஞ் செட்டியார் அவர்கள்	2	0
90	,,	தி. மு. ஷண்முகம் பிள்ளை அவர்கள் ..	2	2
106	,,	S. N. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள்	2	2
26	,,	P. V. கோலப்ப பிள்ளை அவர்கள் B. A.	2	0

விளம்பரம்.

சைவ சிராத்தவிதி புத்தகம் 1-க்கு விலை அணா 4.

கம்பராமாயணம் ஆரணிய காண்டம் மூலமும் உரையும் விலை ரூ. 3-3-0
போஸ்டேஜ் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள் திருவனந்தபுரம் "அறிவு விளக்கம்" ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். V. P. வழியும் அனுப்பப்படும்.